ஸ்ரீ:

# ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ம ஸ்தோத்திரங்கள்




இலவச வெளியீடு :


**ஸ்ரீ லக்ஷ்மிஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**

ராமகிருஷ்ணா நகர், புதுவை–1. போன் : 5501211.

ஸ்ரீ:

# ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம ஸ்தோத்திரங்கள்



ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி

இலவச வெளியீடு

**ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**

ராமகிருஷ்ணா நகர், புதுவை-1. போன் : 5501211.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ-பரப்ரஹ்மணே நம:

## முன்னுரை

"**ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**" மூலமாக இதுவரை பல நல்ல ஸ்தோத்திரங்கள் வெளியிட்டு இருக்கிறோம். அமோகமான நற்பலன்களை அடைந்த பக்தர்கள் அடிக்கடி அடுத்தபடி எந்தெந்த ஸ்தோத்திரங்களை வெளிடப் போகிறீர்கள் என்று ஆவலாக எதிர்ப்பார்க்கின்றனர். "ஸ்ரீ நாராயண கவசத்தை" இப்போதுதான் வெகு சமீபத்தில் வெளியிட்டோம். நரஸிம்மனைப் பற்றிய இரண்டு ஸ்தோத்திரங்களை ஏற்கனவே வெளியிட்டு இருக்கிறோம். இந்த மலரில் ஆறு நரஸிம்ம ஸ்தோத்திரங்களை வெளியிடுகிறோம். ஒவ்வொன்றும் வேதங்கள், உபநிஷத்துகள் போல் திருஷ்டா திருஷ்ட பலன்களை தரக்கூடியவை. இவைகளைப் பற்றி தனித்தனியாக வெகு சுருக்கமாக விவரங்களை தந்திருக்கின்றோம். பக்தர்கள் இதை கண்டு அவர்களுடைய சமய சந்தர்பங்களை எதிர் நோக்கி, பூர்த்தியாக இந்த ஆறு ஸ்தோத்திரங்களையோ அல்லது இரண்டொரு ஸ்தோத்திரங்களையோ ஜபித்து ஸ்ரீ நரஸிம்மனின் அருளுக்கு பாத்திரர்களாக ஆக வேண்டுமென்று ஸ்ரீ சிங்கப் பெருமாளை வேண்டி நிற்கின்றோம்.

**1. ஸ்ரீ நவ நரஸிம்ஹ ஸ்துதி :** இந்த ஸ்தோத்திரத்தை அஹோபிலத்தில் ஸேவை சாதிக்கும் நவ நரஸிம்ஹரின் பேரில் ஸ்ரீ மடத்தில் 25-வது பட்டத்தில் எழுந்தருளிந்த "சாபானுக்ரஹஸ்வாமி" என்று பிரஸித்தி பெற்ற "ஸ்ரீ ஸ்ரீனிவாஸ யதீந்தர மஹாதேசிகன்" என்றும் பக்ஷிராஜ ஜீயர் என்றும் போற்றப்பட்ட இந்த மஹா ஸ்வாமி அருளிச் செய்தது. அஹோபில க்ஷேத்திரத்தை ஒருமுறை தரிசிப்பதும், ஸ்மரிப்பதும் பூர்வ கிருத புண்யம் இருந்தால் தான் முடியும் என்று சொல்வார்கள். அங்கே எழுந்தருளியுள்ள நவந்ருஸிம்ஹர்களையும் ஏக காலத்தில் அவர்கள் எழுந்தருளியிருக்கும் ஸன்னிவேசத்தோடு ஸ்மரிக்க இதைவிட உயர்ந்த வழி இல்லை. இந்த ஸ்தோத்திரத்தை தவறாமல் ஜபித்து





சிங்கவேள் குன்ற எம்பெருமானை ஸ்மரித்து உயர்ந்த புருஷார்த்தங்களை அடையலாம். இதை ஒரு தரம் ஜபம் செய்ய ஐந்து நிமிஷங்கள் கூட ஆகாது.

**2. ஸ்ரீ மந்தர ராஜபத ஸ்தோத்திரம் :** (ஈச்வர ஸம்ஹிதையில் உள்ளது) மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரம் ருத்திரனால் செய்யப்பட்டது அஹோபில க்ஷேத்திரத்தில் ஒரு குகையில் ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிக்கும் அவருக்கு நேர் எதிரில் ருத்திரன் லிங்கரூபமாக எழுந்தருளியிருக்கிறார். இந்த இடத்தில்தான் இந்த ஸ்தோத்திரம் செய்யப்பட்டதாக ஐதிஹ்யம். "**உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோ முகம் ந்ருஸிம்ஸம் பீஷணம் பத்ரம் ம்ருத்யுமிருத்யும் நமாம்யஹம்**" என்பது ந்ருஸிம்ஹ அனுஷ்டுப் மந்த்ரம். இந்த மந்த்ரத்தில் வரும் பதங்கள் ஒவ்வொரு ஸ்லோகத்திலும் ந்யஸித்து இந்த ஸ்தோத்திரங்களை செய்யப்பட்டு உள்ளது. ஒவ்வொரு ஸ்லோகமும் ஒவ்வொரு அற்புதமான பலனை தரும். இந்த சிறிய மலரில் கொடுக்கப்பட்ட ஸ்லோக நம்பர்களை குறித்து அந்த ஸ்லோகங்களை ஜபித்தால் தரும் பலன்களை கொடுத்திருக்கிறோம்.

**ஸ்லோகம் 2 :** விரோதிகளை அடக்குகின்றது. **ஸ்லோகம் 4 :** கண்பார்வை திருந்தும். **ஸ்லோகம் 5 :** எந்த அவயங்களில் குறை இருந்தாலும் பாரிச வாயு போன்ற கெட்ட வியாதிகள் இருந்தாலும் சரியாகி விடும். **ஸ்லோகம் 7 :** பூத, ராட்சஸ பீடைகளிலிருந்து கரிப்பாற்றி சர்வ ரோக சமனம் செய்யும். **ஸ்லோகம் 8 :** எல்லா விதமான நற்பலன்களையும் கொடுக்கும். குறிப்பாக கல்யாணம் ஆகாதவர்க்கு கல்யாணம் ஆகும். **ஸ்லோகம் 9 :** யம பயத்தை நீக்கும். தீர்காயுசை கொடுக்கும். **ஸ்லோகம் 11 :** பகவானுக்கு நாம் தாஸ பூதர்கள் என்ற உயர்ந்த எண்ணத்தை அறிய வைத்து நிரந்தரமாக அவர் கடாட்ஷத்தை கொடுக்கும். **ஸ்லோகம் 12 :** இந்த ஸ்லோகத்தில் கொடுக்கப்பட்ட பல ஸ்ருதி இது ப்ராத, மாத்யான்னிக, ஸாயங்கால வேளைகளில் இந்த ஸ்தோத்திரத்தை ஜபித்து வந்தால் வித்யா, ஆயுள், லக்ஷ்மி கடாட்சம் மூன்றும் விருத்தியாகும்.

**3. ஸ்ரீ ந்ருஸிம்ஹ த்வாத்ரிம்சத் பீஜமாலா ஸ்தோத்திரம் :** இந்த அற்புதமான ஸ்தோத்திரம் பாரத்வாஜரால் செய்யப்பட்டது. மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரத்தில் பதங்கள் ந்யஸித்து செய்யப்பட்டது. இங்கே 32 அக்ஷரங்களையும் ந்யஸித்து செய்யப்பட்டிருப்பது காணலாம். இந்த ஸ்தோத்திரத்தை படித்த மாத்திரத்தில் சர்வ துக்கங்களும் விலகும். ராஜவச்யம், ஜகத் வச்யம், ஸர்வ வச்யம் ஏற்படும். பூத பிசாசு, பீடைகள், வியாதி, துர்பிக்ஷம் போன்றவை சடுதியில் மறையும். கல்வியை அபேக்ஷித்தவர் கல்வியை அடைவார் ஐச்வரியத்தை அபேக்ஷித்தவர் அதை அடைவார். மற்றபடி ஐஹிக ஆமுஷ்மிக மோக்ஷ பரியந்தமான பலன்கள் எல்லாம் கிட்டும். நம் மனதில் என்ன பலன்கள் வேண்டுமென்று தோன்றுகிறதோ அவைகள் எல்லாம் கிட்டும். உயர்வான பலன் தரும் ஸ்தோத்திரம் இது.

**4. ஸ்ரீந்ருஸிம்ஹ கவசம் :** எந்த சிசுக்காக ஸ்ரீ மந்நாராயணன் ந்ருஸிம்ஹவதாரம் செய்தாரோ அந்த ப்ரஹ்லாதனால் அருளிச் செய்யப்பட்டது. இந்த ஸ்தோத்திரம் ஸ்ரீ பிரம்மாண்ட புராணத்தில் உள்ளது. கடன் தொல்லை, சத்ருபயம் போன்ற பல கஷ்டங்களை போக்கும் அருமருந்து இது.

**5. ருண விமோசன ஸ்தோத்திரம் :** இந்த ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ மந் நாராயணனின் பரத்வம் பரக்க பேசப்பட்டிருக்கிறது. கிரகபீடை, கஷ்ட தசை, கடன் தொல்லை போன்ற உபத்ரவங்களிலிருந்து உடனே காப்பாற்றுகிறது.

**6. ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம் :** சங்கட நாசன லக்ஷ்மி நரசிம்ம ஸ்தோத்திரம் என்ற இந்த ஸ்லோகங்களை திருவெள்ளக் குளத்தில் சொல்லியே சிறுவன் ஸ்வேதன், மரண பயம் நீங்கி, நீண்ட ஆயுள் பெற்றதாகப் புராணங்கள் சொல்கின்றன. இதற்கு லக்ஷ்மி நரசிம்ம கருணாரஸ ஸ்தோத்ரம், லக்ஷ்மி நரசிம்ம ம்ருத்யுஞ்சய ஸ்லோகம் என்று பல பெயர்களும் உண்டு. இது ஜகத்குரு ஆதிசங்கரரால் எழுதப்பட்டது.

- R. S. Chari, IAS (R)





## ஸ்ரீ நரசிம்மரை வழிபடுவது எப்படி!

ஸ்ரீ நரஸிம்மனுடைய அவதாரத் தோற்றம், சிம்ம முக உருவில் பயங்கரமாகவும், பக்தனான குழந்தை பிரகலாதனுக்கு இரணிய கசிபு இழைத்த கொடுமைகளினால் உக்கிரமான கோபம் கொண்டவனாகவும் ஸேவைகளை சாதிப்பதால், அவனைப் பூஜிப்பது கடினம் என்று பலர், பல காலமாகத் தவறான கருத்தைக் கொண்டுள்ளனர்.

இரணிய கசிபுவை வதம் செய்த பிறகு ,உக்கிரமான கோபத்துடன் அக்கினி போன்று ஜ்வலித்த ஸ்ரீ நரஸிம்மனை அணுகுவதற்குத் தேவர்களும், முனிவர்களும், மகரிஷிகளும் - (ஏன்! மகாலட்சுமி கூட) அஞ்சினார்களாம்.

அப்போது குழந்தை பிரகலாதன் சிறிதளவும் பயமின்றிக் கூப்பிய கரங்களுடன் ஸ்ரீ நரசிம்மனை அணுகியவுடன், கோபம் அனைத்தும் நீங்கி, அப்படியே அக்குழந்தையை வாரி அணைத்துத் தன் மடி மேல் அமர்த்தி, அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தானாம் அப்பிரபு!

பக்தர்களிடம் அத்தனை வாத்ஸல்யம் அவனுக்கு தனக்கு அபசாரம் செய்தவர்களை அவன் பொறுத்துக் கொள்வான். ஆனால் தனது பக்தர்களுக்கு அநீதி செய்பவர்களை பொறுத்துக் கொள்ள அவனால் முடியாது. ஏனெனில், தன்னை நம்பும் பக்தர்களிடம் அத்தனை அன்பும் கருணையும் அவனுக்கு. ஆதலால் தான் பக்தவஸலன் என்ற திருநாமம் கொண்டவன் அவன்,

அதாவது தன் பக்தர்களுக்குக் குழந்தை போன்றவன் என்பது பொருள்.

நம்மிடம் அளவற்ற கருணை கொண்ட ஸ்ரீ நரஸிம்மனிடம் பயம் ஏன்? திருமலையில் எழுந்தருளியுள்ள வேங்கடத்து இன்

அமுதனின் ஆராதனை மணியின் அம்சமாக அவதரித்தவரும், மகாபுருஷருமான ஸ்ரீ ஸ்வாமி வேதாந்த தேசிகனும், ஸ்ரீ நரஸிம்மன் தனது பக்தர்களிடம் வைத்துள்ள கருணையைப் பற்றி, மனம் உருகிப் போற்றியிருக்கிறார்.

ஸ்ரீ நரஸிம்மனை ஆராதிப்பது (பூஜிப்பது) மிகவும் சுலபம் என்பதையும் அனைவருக்கும் அவன் எளிதானவன் என்பதையும், முற்பிறவி தவறுகளின் பலனாக ஏற்படும் மிகக் கொடிய துன்பத்தையும் ஒரு நொடியில் போக்கி அருளக்கூடிய பேரருளாளன் அவன் என்பதையும், தற்போது அஹோபில மடத்தை அலங்கரித்து வரும், 45வது பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீவண்டகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகன் அவர்கள் அடிக்கடி விளக்கிக் கூறுவது உண்டு. ஆதலால், ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மனைக் கிரக தோஷப் பரிகாரமாக எவரும் வழிபடலாம். அதற்கு உடனடியாகப் பலனும் காண முடியும், தினமும் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மனின் படத்தை வைத்து, நெய் தீபம் ஏற்றிக் குறைந்தது 12 முறையாவது வலம் வந்து வணங்க வேண்டும். வணங்கிய பிறகு வெல்லத்தினால் செய்த பானகம் அமுது செய்விக்க (நைவேத்தியம்) வேண்டும். 48 நாட்களாவது பூஜித்து வர வேண்டும். (பிரதோஷ காலத்தில்) மாலை நேரத்தில் செய்வது விசேஷப் பலன் தரும் ஏனெனில் அவன் நரசிங்கமாக அவதரித்தது மாலை நேரம் தான். ஆனால் ஒன்று, ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் மட்டுமின்றி, தெய்வத்தின் எந்த உருவையும், கிரகதோஷப் பரிகாரமாகப் பூஜித்து வரும் காலத்தில், புலால் உணவைத் தவிர்ப்பது, நீராடி, நியமத்துடனும், தூய்மையான உள்ளத்துடனும் நம்பிக்கை, பக்தியுடனும் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்,

இவ்விதம், வழிபட்டு வந்தால், கொடிய, நீண்டகாலத் துன்பமும் நீங்கும் என்பது மிகவும் உறுதியாகும். உண்மையும் ஆகும்.





ஸ்ரீ:

*ஸ்ரீ ஸ்ரீனிவாஸ யதீந்திர மஹா தேசிகன் அருளிச்செய்த*

# ஸ்ரீ நவநரசிம்ம ஸ்துதி

ஸ்ரீ பராங்குச யோகீந்திர சடாரி பிரமுகாந் குரூந் ।
மங்களாசாஸன பராந் மஹிதாந் அநிசம் பஜே ॥ 1

ஜகஜ்ஜன்மாதி லீலாய ஜகதானந்த ஹேதவே ।
ஜகச்சக்ஷ்ர நிவாஸாய ஸ்ரீ நிருஸிம்ஹாய மங்களம் ॥ 2

ஹிரண்யஸ்தம்ப ஸம்பூதி பிரக்யாத பரமாத்மனே ।
பிரஹ்லாதார்த்தி முஷே ஜ்வாலா நிருஸிம்ஹாய மங்களம் ॥ 3

கருடாத்ரி குஹா கேஹே கஜகுண்ட ஸரஸ்தடே ।
ஹிரண்யஸ்தாந் வஹங்கார ஹாரி ஸிம்ஹாய மங்களம் ॥ 4

வார்த்தி ஜாவாரித ப்யைர் வாணீபதி முகைஸ்ரை ।
மஹிதாய மஹோதார மாலோலாயாஸ்து மங்களம் ॥ 5

வராஹ குண்டே மேதின்யை வாராஹார்த்த பிரதாயினே ।
தந்தலக்ன ஹிரண்யாக்ஷ தம்ஷ்ட்ர ஸிம்ஹாய மங்களம் ॥ 6

கோபூஹிரண்ய நிர்விண்ண கோபீலஞான தாயினே ।
பிரபஞ்ஜன ஸ்னாஸீர காரஞ்ஜாயாஸ்து மங்களம் ॥ 7

பார்கவாக்ய தபஸ்வீச பாவனா பாவிதாத்மனே ।
அக்ஷய்யதீர தீரஸ்த்த பார்கவாயாஸ்து மங்களம் ॥ 8

சதுரானன ஷோசோத்தோப்ஜ சித்ரபானு ஸ்வரூபிணே ।
வேதாத்திரி கஹ்வரஸ்தாய யோகானந்தாய மங்களம் ॥ 9

ஹாஹா ஹூஹ்ஹாவாக்ய கந்தர்வ நருத்தகீத ஹ்ருதாத்மனே ।
பவஹந்திருதடஸ் சத்ரவட ஸிம்ஹாய மங்களம் ॥ 10

பரத்வாஜ மஹாயோகி மஹாபாதக ஹாரிணே ।
தாபனீய ரஹஸ்யார்த்தி பாவனாயாஸ்து மங்களம் ॥ 11

ஸ்ரீ சடாரி யதீந்திராதி யோகி ஹ்ருத்பத்ம பானவே ।
ஸர்வத்ர பரிபூர்ணாய அஹோபிலேசாய மங்களம் ॥ 12

மங்களாசாஸனமிதம் ஸ்ரீனிவாஸ முனீரிதம் ।
மஹனீயம் படந் ச்ருண்வந் மங்களாய தனம் பவேத் ॥ 13




அஹோபிலம் நவ நரசிம்மப் பெருமாள்





# ஸ்ரீ மந்த்ரராஜபத ஸ்தோத்திரம்

## (ஈஸ்வர ஸம்ஹிதை)



உக்கிர சுயம்பு நரசிம்மப்பெருமாள் (அஹோபிலம்)

*வ்ருத்தோத்புல்ல விஸாலாக்ஷம் விபக்ஷக்ஷய தீக்ஷிதம் ।*
*நிநாதத்ரஸ்த விஸ்வாண்டம் விஷ்ணுமுக்ரம் நமாம்யஹம் ॥ 1*

உருண்டு, திரண்டு, மலர்ந்து விசாலமான திருக்கண்களுடன் (பக்தர்களைக் கடாக்ஷித்துக் கொண்டும்) அவர்களின் விரோதிகளைப் போக்குவதையே தமக்கு அவச்யமானதொரு வ்ரதம்போல் கொண்டும் அதற்கு வேண்டிய வீரகோஷம் செய்யுங்கால் அந்த கோஷத்தால் ப்ரஹ்மாண்டம் முழுவதையுமே நடுநடுங்கச் செய்து கொண்டும் இதற்காக எங்கும் வ்யாபித்தும் அப்பொழுது காணும் சத்ருக்கள், என்னே! உக்ரமான உருவம் என்று கருதும்படி அவர்களுக்கு உக்ரரூபமாயுமிருக்கும்

ஸ்ரீந்ருஸிம்ஹ பகவானை நான் நமஸ்கரிக்கிறேன்.

*ஸர்வைரவத்யதாம் ப்ராப்தம் ஸபலௌகம் திதே: ஸுதம் |*
*நகாக்ரை: ஸகலீசக்ரே யஸ்தம் வீரம் நமாம்யஹம் ||* 2

பகவத் ஸ்ருஷ்டியில் அடங்கிய ஒருவராலும் சாவில்லாமையை வரமாகப் பெற்ற திதியின் பிள்ளையான ஹிரண்யகசிபுவை கேவலம் தம்முடைய நகங்களின் நுனிகளாலேயே துண்டு துண்டாகச் செய்து, எவ்விதத்திலும் கலங்காமல் நின்ற நிகரற்ற வீரனை நமஸ்கரிக்கிறேன்.

*பதாவஷ்டப்த பாதாளம் மூர்த்தாவிஷ்ட த்ரிவிஷ்டபம் |*
*புஜப்ரவிஷ்ட அஷ்டதிஸம் மஹாவிஷ்ணும் நமாம்யஹம் ||* 3

பாதாளத்தில் திருவடிகளும், தேவலோகத்தில் திருமுடியும், எட்டு திக்குகளிலும் புஜங்களுமாக உலகம் முழுவதையும் தன் விச்வரூபத்தால் வ்யாபித்து நின்று, அத்தால் மஹாவிஷ்ணு என்று அஸாதாரண திருநாமத்திற்கு இலக்காகி நின்ற ஸ்ரீ நரஸிம்ஹ பகவானை நமஸ்கரிக்கிறேன்.

*ஜ்யோதீம்ஷி அர்கேந்து நக்ஷத்ர ஜ்வலநாதீந் அநுக்ரமாத் |*
*ஜ்வலந்தி தேஜஸா யஸ்ய தம் ஜ்வலந்தம் நமாம்யஹம் ||* 4

ஸூர்யன், சந்திரன், நக்ஷத்ரங்கள், அக்னி முதலிய வஸ்துக்கள் எந்த பகவானுடைய அநுக்ரஹத்தின் ஏக தேசத்தால் கிடைத்த தேஜஸ்ஸை வைத்துக்கொண்டு ஜோதிஸ் என்ற பெயருடன் ஜ்வலிக்கின்றனவோ; அப்படிப்பட்ட ஜ்வலிக்கும் பரமாத்ம ஸ்வரூபமான ஸர்வேச்வரனை நமஸ்கரிக்கிறேன்.





*ஸர்வேந்த்ரியை: அபிவிநா ஸர்வம் ஸர்வத்ர ஸர்வதா |*
*ஜாநாதி ய: நமாமி ஆத்யம் தமஹம் ஸர்வதோ முகம் ||* 5

இதர சேதனர்கள் வஸ்துக்களையறிவது போல இந்திரியங்களின் ஸஹாயாபேக்ஷையன்றிக்கே ப்ரத்யக்ஷத்தாலே எல்லாவற்றையும், எவ்விடத்திலும், எக்காலத்திலும் தானாக அறியுமவனாய், அதனால் 'ஸர்வதோமுகன்' என்ற திருநாமம் பூண்ட ஜகத்காரணமான பகவானை நமஸ்கரிக்கிறேன்.

*நரவத் ஸிம்ஹவத் சைவ ரூபம் யஸ்ய மஹாத்மந: |*
*மஹாஸடம் மஹாதம்ஷ்ட்ரம் தம் ந்ருஸிம்ஹம் நமாம்யஹம் ||* 6

தன் பக்தர்கள் திறத்தில் பரமோதாரனான எந்த பகவான் அந்த பக்தர்களை காக்கும் பொருட்டு ஆச்ரிதர்கள் கிட்டி நெருங்கும்படிக்கும், அவர்களின் விரோதிகள் அஞ்சியோடும்படிக்கும், உறுப்பான ப்ராணிவர்கத்தில் சிறந்ததான மனித ரூபத்துடனும், விரோதிகளையப்போதே ஒழிக்கத் தக்கவனிவன் என்று தெரிவிக்க அவ்விரோதிகளுக்கு பயங்கரமான ஸிம்ஹரூபத்துடனும் கலந்து, பிடரி மயிருடனும் கோரைப்பற்களுடனும் கூடிய தனக்கு மிகவும் அழகாயும், அபிமதமாயுமிருந்து சிறந்ததொரு ரூபத்தை தானபேக்ஷித்தபோது பக்தாநுக்ரஹத்திற்காக அங்கீகரித்த ஸ்ரீ அழகியசிங்கரை நமஸ்கரிக்கிறேன்.

*யந்நாமஸ்மரணாத் பீதா: பூதவேதாள ராக்ஷஸா: |*
*ரோகாத்யா: ச ப்ரணஸ்யந்தி பீஷணம் தம் நமாம்யஹம் ||* 7

எந்த ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநாமத்தை ஸ்மரித்த மாத்திரத்திலேயே பூதங்கள் என்றும் வேதாளங்களென்றும்

ராக்ஷஸர்களென்றும், சொல்லப்படும் வெளி விரோதிகளும் ரோகம் முதலிய உள் விரோதிகளும் நின்றவிடம் தெரியாமல் போய் விடுவார்களோ பயங்கரமான ஸ்ரீநரஸிம்ஹரூபியான பகவானை நம ஸ்கரிக்கிறேன்.

*ஸர்வோபி யம் ஸமாச்ரித்ய ஸகலம் பத்ரம் அச்நுதே |*
*ச்ரியா ச பத்ரயா ஜுஷ்ட: ய: தம் பத்ரம் நமாம்யஹம் ||* 8

உலகத்தில் எல்லோரும் எந்த பகவானை ஆச்ரயித்து ஸகல க்ஷேமத்தையும் பெறுகின்றார்களோ, எல்லோருக்கும் க்ஷேமத்தைத் தருவதால் பத்ரை என்ற பெயர் பெற்ற ஸ்ரீ மகாலக்ஷ்மி எந்த பகவானை ஆச்ரயித்திருக்கிறாளோ அப்படிப்பட்ட பத்ரசப்தத்திற்குப் பொருளான பகவானை நமஸ்கரிக்கிறேன்.

*ஸாக்ஷாத் ஸ்வகாலே ஸம்ப்ராப்தம் ம்ருத்யும் சத்ருகணானபி |*
*பக்தாநாம் நாசயேத் யஸ்து ம்ருத்யும்ருத்யும் நமாம்யஹம் ||* 9

விஷ்ணு பக்தர்கள் யமனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர்களல்லவென்றிருந்தாலும் இவ்வுண்மை அறியாத யமன் பகவத் பக்தர்களிடம் ஸாமான்யர்களிடத்தில் போல் தேஹாவஸாநகாலத்தில் நேரில் தானே வந்தாலும், அவனையும் மற்றும் காமக்ரோதாதிகளான சத்ருக்கூட்டங்களையும் களைந்து அருள்புரிகிறானோ அந்த ம்ருத்யுவுக்கும், ம்ருத்யுவான ஸ்ரீ ந்ருஸிம்ஹ பகவானை நமஸ்கரிக்கிறேன்.

*நமஸ்காராத்மகம் யஸ்மை விதாய ஆத்மநிவேதநம் |*
*த்யக்த து: க: அகிலாந் காமாந் அச்நுதே தம் நமாம்யஹம் ||* 10

எந்த பகவானிடம் சரணாகதியென்ற ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணத்தைச் செய்து அதன் மூலம் ஸமஸ்த துக்கங்களும்





நீங்கி ஸகல புருஷார்த்தங்களையும் பெறுவனோ அந்த ஸ்ரீ நரஸிம்ஹ பகவானை சரணமடைகிறேன்.

*தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: |*
*அத: அஹமபி தே தாஸ: இதி மத்வா நமாம்யஹம் ||* 11

எல்லா சேதனர்களும் பரமாத்மாவுக்கு இயற்கையாகவே தாஸர்கள். ஆகையால் அவர்களில் ஒருவனான நானும் ஹே ஸ்ரீந்ருஸிம்ஹரூபியான பகவானே! உமக்கு தாஸன் என்று நினைத்து சேஷத்வ ஜ்ஞானபூர்வகமாக உம்மை சரணமடைகிறேன்.

சங்கரேண ஆதராத்ப்ரோக்தம் பதாநாம் தத்வம் உத்தமம் |
த்ரிஸந்த்யம் ய: படேத் தஸ்ய வித்யா ஆயு: ஸ்ரீ: ச வர்த்ததே || 12

இப்படி மந்த்ர ராஜபதங்களின் உண்மைப் பொருள் ஸ்ரீ சங்கரனால் (பரமேச்வரனால்) மிக்க ஆதரத்துடன் உரைக்கப் பட்டிருக்கிறது. இதை காலையிலும், மத்யாஹ்நத்திலும், ஸாயங்காலத்திலும் படிப்பவர்களுக்கு ஸத்வித்யையும், பக்தியும், ஜ்ஞானமும் வளர்ந்துவரும்.



ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் - அஹோபிலம், ஆந்திரம்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹாய நம:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ த்வாத்ரிம்சத் பீஜமாலா ஸ்தோத்ரம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ பீஜாக்ஷரங்கள் முப்பத்திரண்டில் ஒவ்வொன்றையும் முறையே முதல் எழுத்தாக வைத்து 32 சுலோகங்களின் வடிவில் இந்த ஸ்தோத்ரம் அமையப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தோத்திரத்தைக் குருபரம்பரையாகக் கேட்டவர்கள் மட்டுமே அறிவார்களென்றும், இதை ஜபிப்பவர்களுக்கு ஸகல க்ஷேமங்களும் உண்டாகின்றன வென்று சொல்லி, இந்த ஸ்தோத்திரத்தை லோக க்ஷேமத்திற்காக வெளியிடும்படி எம்மிடம் அளித்த புதுவை ஸ்ரீ உ.வே. வரகவி நாடாதூர் வேங்கடாசார் ஸ்வாமிக்கு எமது க்ருதக்ஞதையைத் தெரிவித்து இங்க இதை வெளியிடுகிறோம். இதை அனைவரும் படித்துப் பயனடைவோமாக.

உத்கீதாட்யம் மஹாபீமம் த்ரிநேத்ரஞ்சோக்ரவிக்ரஹம் |
உஜ்வலம் தம் ஸ்ரியாஜுஷ்டம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம்ஹ்ரீம்
ந்ருஹரிம் பஜே|| 1

க்ரந்தாந்தவேத்யம் தேவேசம் ககனாச்ரயவிக்ரஹம் |
கர்ஜாநா த்ரஸ்தவிச்வாண்டம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம்
ந்ருஹரிம் பஜே|| 2

வீதிஹோத்ரேக்ஷணம் வீரம் விபக்ஷக்ஷயதீக்ஷிதம் |
விச்வம்பரம் விரூபாக்ஷம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம்
ந்ருஹரிம் பஜே || 3





ரங்கநாதம் தயாநாதம் தீனபந்தும் ஜகத்குரும் |
ரணகோலாஹலம் தீரம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம்
ந்ருஹரிம் பஜே || 4

மந்த்ரராஜா ஸநாரூடம் மார்த்தாண்டோஜ்ஜ்வல தேஜஸம் |
மணிரத்ந கிரீடாட்யம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம் பஜே || 5

ஹாஹா ஹூஹ்வாதி கந்தர்வை : ஸ்தூயமாந பதாம்புஜம் |
உக்ரரூபதரம் தேவம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம் பஜே || 6

விதிவேதப்ரதம் வீரம் விக்நநாசம் ரமாபதிம் |
வஜ்ரகட்கதரம் தீரம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம் பஜே || 7

விஷ்ணுஸப்ததளஸ்தம்பம் துஷ்டராக்ஷஸ நாசநம் |
துர்நிரீக்ஷ்யம் துராதர்ஷம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம் பஜே || 8

ஜ்வலத்பாவகஸங்காசம் ஜ்வாலாமாலா முகாம்புஜம் |
தாரித்ர்யநாசநம் ஸ்ரீதம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம் பஜே || 9

லம்பீஜம் தேவதாநாதம் தீர்க்கவ்ருத்த மஹாபுஜம் |
லக்ஷ்ம்யாலிங்கித வக்ஷஸ்கம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம்
பஜே|| 10

தந்த்ரீபூத ஜகத்கருத்ஸ்நம் தர்மவைகுண்ட நாயகம் |
மந்த்ரஜாபகஸாந்நித்யம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம் பஜே || 11

ஸர்வாண்டகோஸ மாலாட்யம் ஸர்வாண்டாந்தரவாஸிநம் |
அஷ்டாஸ்யகண்ட பேரண்டம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம்
பஜே || 12

தோமராங்குஸவஜ்ராணாம் ஸமதம்ஷ்ட்ரைர்முகை ஸ்திதம் |
சத்ருக்ஷயகரம் வ்யாக்ரம் ஸ்ரீம் க்ஷ்மிரைளம் ஹ்ரீம் ந்ருஹரிம் பஜே || 13

முநிமாநஸ ஸஞ்சாரம் புக்திமுக்திபலப்ரதம் ।
ஹயாஸ்யம் ஜ்ஞாநதாதாரம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம்
நருஹரிம் பஜே ॥ 14

கம்சப்தகங்கணோபேதம் கமலாயதலாசநம்।
ஸர்வைச்வர்யப்ரதம் க்ரோடம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம்
பஜே॥ 15

நருலோகரக்ஷணபரம் பூதோச்சாடந தத்பரம் ।
ஆஞ்ஜநேயமுகம் வீரம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 16

ஸிதவர்ணம் தீர்க்கநாஸம் நாகாபரண பூஷிதம் ।
கருடாஸ்யம் மஹாதீரம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 17

ம்ஹம் ம்ஹம் ம்ஹம்சப்தஸஹிதம் மாநவாராதநோத்ஸுகம் ।
பல்லூகவக்த்ரம் பீதிக்நம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 18

பீமாக்ஷநாஸிகோபேதம் வேதக்ரஹணதத்பரம் ।
தரணீத்ருமுஸ்தாங்கம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 19

ஷட்வக்த்ரபூஜிதாங்கர்யப்ஜம் த்ருஷ்டகோத்ருதமண்டலம் ।
கோமலாங்கம் மஹாஸத்வம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம்
பஜே ॥ 20

ணாங்காரகிங்கிணீ ஜாலம் ஜ்ஞாநமூர்த்திம் தராபதிம் ।
வராஹாங்க முதராங்கம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 21

பயக்நம் ஸர்வபூதாநாம் ப்ரஹ்லாதாபீஷ்டதாயிநம் ।
நருஸிம்ஹஸ்தம்ப ஸம்போத்யம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம்
நருஹரிம் பஜே ॥ 22





த்ரவ்யயாச்ஞாபரம் விப்ரம் பலிமாநமுஷம் ஹரிம் ।
வாமநம் ரூபமாஸ்தாய ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 23

ம்ருத்யுரூபம் க்ஷத்ரியாணாம் முக்தஸ்நிக்தமுகாம்புஜம் ।
ஜாமதக்ந்யம் பரம் தேவம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 24

த்யும் சப்தயுக்தகோதண்டம் துஷ்டராவண மர்த்தநம் ।
ராமம் கமலபத்ராக்ஷம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 25

ம்ருதங்ககீதப்ரணவ ச்ரவணாஸக்தமாநஸம் ।
பலராமம் ஹலதரம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 26

த்யும் த்யும் த்யும் த்யும் வேணுநாதம் ப்ரம்ஹருத்ராதி ஸேவிதம் ।
யசோதா தநயம் க்ருஷ்ணம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம்
பஜே ॥ 27

நளிநாக்ஷம் அக்நிரூபம் ம்லேச்ச நாசந தத்பரம் ।
ஜ்வாலாமாலாபூரி தாங்கம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம்
பஜே ॥ 28

மாநாயகம் மஹாஸத்வம் மமாபீஷ்ட ப்ரதாயகம் ।
மத்ரக்ஷணபரம் ஸாந்தம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம்
பஜே ॥ 29

ம்ருத்யுடங்கார ஸம்யுக்தம் சார்ங்தந்வாந மீச்வரம் ।
ஸத்வஸ்த்ராபரணோபேதம் ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம்
பஜே ॥ 30

யந்நாமஸ்மரணாத்ஸர்வ பூதவேதாளராக்ஷஸா ।
சத்ரவ : ப்ரளயம்யாந்தி ஸ்ரீம் க்ஷ்மிரெளம் ஹ்ரீம் நருஹரிம் பஜே ॥ 31

ஹம்பீ ஜநாதம் ஸர்வேசம் ஸரணம் வரயாம்யஹம் |
உபாயபூதம் லக்ஷ்மீஸம் ஸ்ரீம் க்ஷ்மிரௌம் ஹ்ரீம் ந்ருஹ்ரிம் பஜே || 32

## பலச்ருதி

பரத்வாஜக்ருதம் ஸ்தோத்ரம் மந்த்ரஜார்ணவஸம்பவம் |
ஸக்ருத் படநாமாத்ரேண ஸர்வதுக்க விநாசநம் ||

ராஜவச்யம் ஜகத்வச்யம் ஸர்வவச்யம் பவேத் த்ருவம் |
பூதப்ரேதபிஸாசாதி வ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கரா: ||

துராதேவ ப்ரணஸ்யந்தி ஸத்யம் ஸத்யம் ந ஸம்ஸய |
வித்யார்த்தீ லபதே வித்யாம் தநார்த்தீ லபதே தநம் ||

ஸர்வார்த்தீ ஸர்வமாப்நோதி மோக்ஷார்த்தீ மோக்ஷமாப்நுயாத் |
யம் யம் காமயதே சித்தம் தம் தம் ப்ராப்நோதி நிஸ்சயம் ||

## ஸ்ரீ ந்ருஸிம்ஹாநுஷ்டுப் மூலம்

உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுகம் |
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யும்ருத்யும் நமாம்யஹம் ||



ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் - பூவரசன்குப்பம்





ஸ்ரீ:

# ஸ்ரீந்ருஸிம்ஹ - கவசம்

## *(ப்ரஹ்லாதனால் செய்யப்பட்டது)*

***கடன் தொல்லை, சத்ருபயம் இராது; துஸ்ஸ்வப்நம், சித்தப்ரமை, ப்ரஹ்மரக்ஷஸ் முதலிய தோஷங்கள் நீங்கும்.***

ந்ருஸிம்ஹ-கவசம் வக்ஷ்யே ப்ரஹ்லாதேநோதிதம்புரா
ஸர்வரக்ஷாகரம் புண்யம் ஸர்வோபத்ரவ-நாஸநம் || 1

ஸர்வஸ்ம்பத்கரஞ்சைவ ஸ்வர்கமோக்ஷ-ப்ரதாயகம் |
த்யாத்வா ந்ருஸிம்ஹம் தேதேஸம் ஹேமஸிம்ஹாஸநஸ்திதம் || 2

விவ்ருதாஸ்யம் த்ரிநயநம் ஸரதிந்துஸமப்ரபம் |
லக்ஷ்ம்யாலிங்கிதவாமாங்கம் விபூதிபிருபாஸிதம் || 3

சதுர்புஜம் கோமளாங்கம் ஸ்வர்ணகுண்டல-ஸோபிதம் |
ஔர்வோஜ-ஸோபிதோரஸ்கம் ரத்நகேயூரமுத்ரித || 4

தப்தகாஞ்சந-ஸங்காஸம் பீதநிர்மலவாஸஸம் |
இந்த்ராதிஸுரமௌளிஸ்த-ஸ்புரன்மாணிக்ய தீப்திபி: || 5

விராஜிதபதத்வந்த்வம் ஸங்கசக்ராதிஹேதிபி |
கருத்மதாச விநயாத்ஸ்தூயமாநம் முதான்விதம் || 6

ஸ்வஹ்ருத்கமலஸம்வாஸம் க்ருத்வாது கவசம் படேத் |
ந்ருஸிம்ஹோ மே ஸிர: பாது லோகரக்ஷாத்மஸம்பவ : || 7

ஸர்வகோ (அ) பிஸ்தம்பவாஸ: பாலம் மே ரக்ஷது த்வநிம் |
ந்ருஸிம்ஹோ மே த்ருஸௌ பாது ஸோமஸூர்யாக்நிலோசந: || 8

ஸ்ம்ருதிம் மே பாது ந்ருஹரி: முநிவர்யஸ்துதிப்ரிய: ।
நாஸாம் மே ஸிம்ஹநாஸஸ்து முகம் லக்ஷ்மீமுகப்ரிய: ॥ 9

ஸர்வவித்யாதிப: பாது ந்ருஸிம்ஹோ ரஸநாம் மம ।
வக்த்ரம் பாத்விந்துவதன: ஸதாப்ரஹ்லாதவந்தித: ॥ 10

ந்ருஸிம்ஹ: பாது மே கண்டம் ஸ்கந்தௌ பூபரணாந்தக்ருத் ।
திவ்யாஸ்த்ரஸோபிதபுஜ : ந்ருஸிம்ஹ : பாது மே புஜௌ ॥ 11

கரௌ மே தேவவரதோ ந்ருஸிம்ஹ : பாது ஸர்வத: ।
ஹ்ருதயம் யோகிஸாத்யஸ்ச நிவாஸம் பாது மே ஹரி: ॥ 12

மத்யம் பாது ஹிரண்யாக்ஷவக்ஷ : குக்ஷிவிதாரண : ।
நாபிம் மே பாது ந்ருஹரி: ஸ்வநாபி – ப்ரஹ்ம–ஸம்ஸ்துத ॥ 13

ப்ரஹ்மாண்ட–கோடய : கட்யாம் யஸ்யாஸௌ பாதுமே கடிம் ।
குஹ்யம் மே பாது குஹ்யாநாம் மந்த்ராணாம்
குஹ்யரூபத்ருக் ॥ 14

ஊரூ மநோபவ: பாது ஜாநுநீ நரரூபத்ருத் ।
ஜங்கே பாது தராபார–ஹர்தாயோஸௌ ந்ருகேஸரீ ॥ 15

ஸுரராஜ்யப்ரத: பாது பாதௌ மே ந்ருஹரீஸ்வர ।
ஸஹஸ்ரஸீர்ஷாபுருஷ: பாது மே ஸர்வதஸ்தநும் ॥ 16

மஹோக்ர: பூர்வத: பாது மஹாவீராக்ரஜோ (அ)க்நித: ।
மஹாவிஷ்ணுர்தக்ஷிணேது மஹாஜ்வாலஸ்து நைர்ருதௌ ॥17

பஸ்சிமே பாது ஸர்வேஸோ திஸி மே ஸர்வதோமுக: ।
ந்ருஸிம்ஹ : பாது வாயவ்யாம் ஸௌம்யாம்
பூஷணவிக்ரஹ : ॥ 18





ஈஸான்யாம் பாது பத்ரோ மே ஸர்வ–மங்கள–தாயக: ।
ஸம்ஸாரபயத: பாது ம்ருத்யோர்ம்ருத்யுர்ந்ருகேஸரீ ॥ 19

இதம் ந்ருஸிம்ஹகவசம் ப்ரஹ்லாத – முகமண்டிதம் ।
பக்திமான் ய: படேந்நித்யம் ஸர்வபாபை: ப்ரமுச்யதே ॥ 20

புத்ரவான் தனவான் லோகே தீர்காயுருபஜாயதே ।
யம் யம் காமயதே காமம் தம் தம் ப்ராப்னோத்யஸம்ஸயம் ॥ 21

ஸர்வத்ர ஜயமாப்னோதி ஸர்வத்ர விஜயீபவேத் ।
பூம்யந்தரிக்ஷதிவ்யானாம் க்ரஹாணாம் விநிவாரணம் ॥ 22

வ்ருஸ்சிகோரகஸம்பூத–விஷாபஹரணம் பரம் ।
ப்ரஹ்மராக்ஷஸயக்ஷாணாம் தூரோத்ஸாரண – காரணம் ॥ 23

பூர்ஜேவா தாளபத்ரேவா கவசம் லிகிதம் ஸுபம் ।
கரமூலே த்ருதம் யேன ஸித்யேயு: கர்மஸித்தய : ॥ 24

தேவாஸுரமனுஷ்யேஷு ஸ்வம்ஸ்வமேய ஜயம் லபேத் ।
ஏகஸந்த்யம் த்ரிஸந்த்யம் வா ய: படேன்னியதோ நர: ॥ 25

ஸர்வமங்கள–மாங்கல்யம் புக்திம் முக்திஞ்ச விந்ததி ।
த்வாத்ரிம்ஸத்ஸஹஸ்ராணி படேச்சுத்தாத்மனாம் ந்ருணாம் ॥26

கவசஸ்யாஸ்ய மந்த்ரஸ்ய மந்த்ரஸித்தி: ப்ரஜாயதே ।
அநேந மந்த்ரராஜேன க்ருத்வா பஸ்மாபிமந்த்ரணம் ॥ 27

திலகம் வின்யஸேத் யஸ்ய தஸ்ய க்ரஹபயம்ஹரேத் ।
த்ரிவாரம் ஜபமானஸ்து தத்தம் வார்யபிமந்த்ரய ச ॥ 28

ப்ராஸயேத் யோ நரோ மந்த்ரம் ந்ருஸிம்ஹ–த்யானமாசரன் ।
தஸ்ய ரோகா: ப்ரணஸ்யந்தி யே ச ஸ்யு: குக்ஷிஸம்பவா ॥ 29

கிமத்ர பஹுநோக்தேன ந்ருஸிம்ஹ-ஸத்ருஸோ பவேத் |
மநஸா சிந்திதம் யத்து ஸ தச்சாப்னோத்ய-ஸம்ஸயம் || 30

கர்ஜந்தம் கர்ஜயந்தம் நிஜபுஜபடலம்
ஸ்போடயந்தம் ஹஸந்தம்
ரூப்யந்தம் தாபயந்தம் திவிபுவிதிதிஜம்
க்ஷேபயந்தம் க்ஷிபந்தம் |
க்ரந்தந்தம் கோஷயந்தம் திஸிதிஸி ஸததம்
ஸம்ஹரந்தம் பரந்தம்
வீக்ஷந்தம் கூர்ணயந்தம் கரநிகாஸதை:
திவ்ய - ஸிம்ஹம் நமாமி
இதி ஸ்ரீ ப்ராஹ்மாண்ட-புராணே ப்ரஹ்லாதோக்தம்
ஸ்ரீ ந்ருஸிம்ஹ - கவசம் ஸம்பூர்ணம்

## ருணவிமோசந-ந்ருஸிம்ஹ-ஸ்தோத்ரம்

(கடன் தொல்லைகளால் கஷ்டப்படுபவர்கள் இந்த ஸ்தோத்ரத்தை மனமுருகிப் பாராயணம் செய்தால் கடன் நீங்கி சுகமுண்டாகும்)

1. *தேவதாகார்ய-ஸித்யர்த்தம் ஸபாஸ்தம்ப-ஸமுத்பவம் |*
*ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*

தேவகாரியங்கள் பூரணத்துவம் பெற ஸபா மண்டபத்தூணில் அவதரித்தவரே ! மஹாவீரரே ! என் கடன்களிலிருந்து என்னை விடுவிக்கும்படி வேண்டிக் கொண்டு நமஸ்கரிக்கிறேன்.

2. *லக்ஷ்ம்யாலிங்கித-வாமாங்கம் பக்தாநாம் வரதாயகம் |*
*ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*





மகாலக்ஷ்மியால் தழுவப்பெற்ற இடது பாகத்தை உடையவரே! பக்தர்கள் கேட்கும் வரத்தைத் தருபவரே ! மஹாவீரரே! என் கடன்களிலிருந்து என்னை விடுவிக்கும்படி பிராத்தித்துக்கொண்டு நமஸ்கரிக்கிறேன்.

3. *ஆந்த்ரமாலாதரம் ஸங்க-சக்ராப்ஜாயுத-தாரிணம் |*
*ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*

நரம்புகளை மாலையாக அணிந்து கொண்டவரே சங்கு சக்கரம் தாமரை ஆயுதம் இவைகளைத் தரித்துக் கொண்டவரே! மஹாவீரரே! என்னைக் கடன் உபாதையிலிருந்து காத்தருள நமஸ்கரிக்கிறேன்.

4. *ஸ்மரணாத் ஸர்வ-பாபக்நம் கத்ருஜ-விஷநாஸநம் |*
*ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*

நினைத்த மாத்திரைத்திலேயே பாபங்களை நீக்குபவரே! கத்ருபுத்திரர்களான நாக விஷங்களால் ஆபத்து ஏற்படாமல் காப்பவரே ! ஸ்ரீ ந்ருஸிம்ஹரே, மஹாவீரரே என்னைக் கடன் உபாதைகளிலிருந்து காத்தருள நமஸ்கரிக்கிறேன்.

5. *ஸிம்ஹநாதேந மஹாதா திக்தந்தி-பயநாஸநம் |*
*ஸ்ரீ ந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*

சிம்மத்தின் கர்ஜனையை கேட்டால் யானைகள் அஞ்சி ஓடும், அப்பேர்பட்ட பெரிய பயங்களையே போக்கும் வீரரே ! என் கடன் தொல்லைகளிலிருந்து நான் விடுதலை பெற உம்மை நமஸ்கரிக்கிறோன்.

6. *ப்ரஹ்லாத வரதம் ஸ்ரீஸம் தைத்யேஸ்வர-விதாரிணம் |*
*ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*

பிரகலாதனுக்கு வரம் அளித்தவரே! லக்ஷ்மீபதியே! அசுர வேந்தனன இரண்யகசிபுவின் நெஞ்சைக் கிழித்தவரே! மஹா வீரரான நரஸிம்ஹரே! என் கடன்களிலிருந்து விடுபட உம்மை நமஸ்கரிக்கின்றேன்.

7. *க்ரூரக்ரஹை: பீடிதாநாம் பக்தாநாமபயப்ரதம் |*
*ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*

குருமான க்ரஹ பார்வையால் கஷ்டத்திலிருக்கும் பக்தர்களுக்கு உபயம் தருபவரே மஹாவீரரான நரஸிம்ஹரே கடன் உபாதையிலிருந்து நிவாரணம் பெற உம்மை நமஸ்கரிக்கின்றோன்.

8. *வேதவேதாந்த-யஜ்ஞேஸம் ப்ரஹ்மருத்ராதிவந்திதம் |*
*ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே ||*

வேதம், உபநிஷத் யக்ஞம் இவைகளின் ஈஸ்வரனே பிரம்மா, ருத்ரன் இவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவரே! மஹாவீரரான நரஸிம்ஹரே! கடன் தொல்லைகளிலிருந்து விடுபட உம்மை நமஸ்கரிக்கின்றேன்.

9. *ய இதம் படதே நித்யம் ருணமோசந-ஸம்ஜ்ஞிதம் |*
*அந்ருணீ ஜாயதே ஸத்யோ தநம் ஸீக்ரமவாப்நுயாத் ||*

ருணமோசனம் என்ற இந்த ஸ்தோத்திரத்தை தினமும் மனமுருகிப் படிப்பவருக்கு எவ்வளவு பெரிய கடனும் விரைவில் சூரியனைக் கண்ட பனிமலையின் நிலையை அடையும் அதோடு மட்டுமில்லாமல் நியாயமான முறையில் சம்பத்தும் சேரும்.

இதி ஸ்ரீ ந்ருஸிம்ஹபுராணே ருண
விமோசந-ந்ருஸிம்ஹ-ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்





# ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம்

## (ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர் அருளியது)

1. ஸ்ரீமத்பயோநிதி நிகேதந சக்ரபாணே
போகீந்த்ரபோக-மணி ரஞ்ஜித - புண்யமூர்த்தே
யோகீஸ ஸாஸ்வத ஸரண்ய பவாப்திபோத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

பாற்கடலில் பள்ளி கொண்டவனே, சக்கரம் ஏந்தியவனே. ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டவனே, யோகிகளின், தலைவனே, நிலையானவனே, சம்சாரக் கடலைக் கடக்க உதவும் ஓடமே, நரசிம்மனே, எனக்குக் கை கொடுத்து அருள்வீராக.

2. ப்ரஹ்மேந்த்ர - ருத்ர - மருதர்க்க - கிரீடகோடி -
ஸங்கட்டிதாங்க்ரி - கமலாமல - காந்திகாந்த
லக்ஷ்மி - லஸத்குச - ஸரோருஹ - ராஜஹம்ஸ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

பிரம்மா, இந்திரன், சிவன், மருத்துக்கள், சூரியன் ஆகியோர் வணங்கும் இறைவனே, லக்ஷ்மி தேவியின் ஸ்தனங்கள் போன்ற தாமரையில் ஒளிர்பவனே, லக்ஷ்மி நரசிம்மனே, எனக்குக் கை கொடுத்து அருள்வீராக.

3. ஸம்ஸாரதாவ - தஹநாதுர - பீகரோரு -
ஜ்வாலாவலீபிரதிதக்த - தநூருஹஸ்ய
த்வத்பாதபத்ம - ஸரஸீ - ஸரணாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

லக்ஷ்மிநரசிம்மனே, சம்சாரம் என்னும் காட்டுத்தீயால் எரிக்கப்பட்டு, கருகிய ரோமங்களுடன் துன்பப்படும் எனக்குக் கை கொடுத்து அருள்வீராக.

4. ஸம்ஸார – ஜால பதி தஸ்ய ஜகந்நிவாஸ
ஸர்வேந்த்ரியார்த்த – படிஶாஶ ஜஷோபமஸ்ய
ப்ரோத்கண்டித – ப்ரசுர – தாலுக – மஸ்தகஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

குடும்பம் என்னும் வலையில் விழுந்தவனும் பொருளாசையால் அலைக்கழிக்கப்படுபவனுமான எனக்கு எங்கும் வியாபித்திருக்கும் லக்ஷ்மி நரசிம்மனே கை கொடுத்து அருள்வீராக.

5. ஸம்ஸாரகூப மதிகோர மகாதமூலம்
ஸம்ப்ராப்ய துக்கஸதஸர்ப்ப ஸமாகுலஸ்ய
தீநஸ்ய தேவ க்ருபயா பதமாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

ஆழமானதும் அச்சமூட்டுவதுமான சம்சாரம் என்னும் கிணற்றில் விழுந்து, இன்னல்படும் எனக்கு தேவனே, லக்ஷ்மி நரசிம்மனே, கை கொடுத்து அருள்வீராக.

6. ஸம்ஸாரபீகர – கரீந்த்ர கராபிகாத
நிஷ்பிஷ்டமர்மவபுஷ: ஸகலார்த்திநாஸ
ப்ராண – ப்ரயாண – பவபீதி – ஸமாகுலஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

சம்சாரம் என்னும் யானையின் துதிக்கையால் நசுக்கப்பட்டவனும், பிறப்பு, இறப்பு என்னும் அச்சத்தினால் துன்பப் படுபவனுமான எனக்கு, லக்ஷ்மியுடன் கூடிய நரசிம்மனே, இன்னல்களைப் போக்குபவனே, கை கொடுத்து அருள்வீராக.

7. ஸம்ஸாரஸர்ப்பகந – வக்த்ர – பயோக்ர – தீவ்ர –
தம்ஷ்ட்ரா – கரால – விஷதக்தவிநஷ்ட – மூர்த்தே:
நாகாரிவாஹந ஸுதாப்திநிவாஸ ஸௌரே
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்





வாழ்க்கை என்னும் பாம்பின் வாயில் உள்ள விஷத்தில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படும் எனக்கு, கருடவாகனனே, அமுதக் கடலில் வசிப்பவனே, வசுதேவன் புதல்வனே, லக்ஷ்மி நரசிம்மனே, கை கொடுத்து அருள் வீராக.

8. ஸம்ஸார வ்ருக்ஷ மகபீஜமநந்தகர்ம –
ஸாகாஸதம் கரணபத்ரமநங்க புஷ்பம்
ஆருஹ்ய துக்கபலிதம் பததோ தயாளோ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

பாவங்களை விதையாகவும், புலன்களை இலைகளாகவும், செயல்களை கிளைகளாகவும் காமத்தை வேர்களாகவும், துயரங்களைப் பழங்களாகவும் உடைய வாழ்க்கை என்னும் மரத்தில் நிற்கும் எனக்கு இரக்கமுடையவனே லக்ஷ்மிநரசிம்மனே, கை கொடுத்து அருள்வீராக.

9. ஸம்ஸார – ஸாகர – விஸால – கராலகால –
நக்ரக்ரஹ – க்ரஹந – நிக்ரஹவிக்ரஹஸ்ய
வ்யக்ரஸ்ய ராகரஸநோர்மி – நிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

வாழ்க்கைக் கடலில் காலம் என்னும் முதலைகளால் விழுங்கப்படும் உடலையுடையவனும், பலவித கவலைகள், ஆசைகளையுடையவனுமான எனக்கு, லக்ஷ்மி நரசிம்மரே, கை கொடுத்து அருள்வீராக.

10. ஸம்ஸார – ஸாகர – நிமஜ்ஜந முஹ்யமானம்
தீநம் விலோகய விபோ கருணாநிதே மாம்
ப்ரஹ்லாதகேத – பரிஹார – க்ருதாவதார
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

வாழ்க்கைக் கடலில் மூழ்கித் தவிக்கின்ற சாதாரணமான என்னை, வல்லமை உடையவனே, கருணைநிதியே, பிரஹ்லாதனின் இன்னலைப் போக்கியவனே, லக்ஷ்மிநரசிம்மனே, கை கொடுத்து அருள்வீராக.

11. ஸம்ஸார – கோரகஹநே சரதோ முராரே
மாரோக்ர – பீகர – ம்ருகப்ரவரார்திதஸ்ய
ஆர்த்தஸ்ய மத்ஸரநிதாக – நிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

வாழ்க்கை என்னும் காட்டில் திரிகின்றவனும், மிருகம் போல் அச்சுறுத்தும் காமனால் பீடிக்கப்பட்டவனும், துன்பப்படுபவனும், பொறாமையினால் பீடிக்கப்பட்டவனுமான எனக்கு, முரன் என்னும் அசுரனைக் கொன்றவனே, லக்ஷ்மியுடன் கூடிய நரசிம்மப் பெருமாளே, கை கொடுத்து அருள்வீராக.

12. பத்த்வா களே யமபடா பஹு தர்ஜயந்த:
கர்ஷந்தி யத்ர பவபாஸ – ஸதைர்யுதம் மாம்
ஏகாகிநம பரவஸம் சகிதம் தயாளோ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

வாழ்க்கை என்னும் நூற்றுக்கணக்கான பாசங்களால் சூழப்பட்ட என்னை, எமனின் ஆட்கள் கழுத்தில் பாசக்கயிற்றால் கட்டி இழுத்துச் செல்கிறார்கள். இரக்க முடையவனே, லக்ஷ்மிநரசிம்மனே, எனக்குக் கை கொடுத்து அருள்வீராக.

13. லக்ஷ்மீபதே கமலநாப ஸுரேஶ விஷ்ணோ
வைகுண்ட க்ருஷ்ண மதுஸூதன புஷ்கராக்ஷ
ப்ரஹ்மண்ய கேஶவ ஜனார்த்தந வாஸுதேவ
தேவேஸ தேஹி க்ருபணஸ்ய கராவலம்பம்

லக்ஷ்மியின் மணாளனே, தாமரையைத் தொப்புளில்





உடையவனே, தேவர் தலைவனே, எங்கும் இருப்பவனே, வைகுண்ட நாதனே, கிருஷ்ணனே, மதுசூதனனே, தாமரைக் கண்ணனே, பிரம்மனே, கேசவனே, ஜனார்த்தனனே, வாசுதேவனே, எனக்குக் கை கொடுத்து அருள்வீராக.

14. ஏகேந சக்ரமபரேண கரேண ஶங்கம்
அன்யேன ஸிந்து–தனயாமவலம்ப்ய திஷ்டன்
வாமேதரேண வரதாபயபத்ம – சிஹ்னம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

ஒரு கையில் சக்கராயுதத்தையும், மறுகையில் சங்கையும், மற்றொரு கையால் லக்ஷ்மியை அணைத்துக் கொண்டும், வலது கையால் வரம் தருதல், காத்தருளல், பத்மமுத்திரை ஆகியவைகளைக் காட்டியும் நிற்கும் லக்ஷ்மி நரசிம்மனே, எனக்குக் கை கொடுத்து அருள்வீராக.

15. அந்தஸ்ய மே ஹ்ருதவிவேகமஹாதநஸ்ய
சோரை : ப்ரபோ பலிபிரிந்த்ரிய – நாமதேயை:
மோஹாந்தகூபகுஹரே விநிபாதிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்


புலன்கள் என்னும் திருடனால், குருடான என் பகுத்தறிவு என்னும் பெரும் செல்வம் திருடப்பட்டு, மோகம் என்னும் பாழும் கிணற்றில் தள்ளப்பட்டுள்ள எனக்கு, தேவனே, லக்ஷ்மி நரசிம்மனே, கை கொடுத்து அருள்வீராக,

16. ப்ரஹ்லாத – நாரத – பராஶர – புண்டரீக
வ்யாஸாதிபாகவத–புங்கவ–ஹ்ருந்நிவாஸ
பக்தாநுரக்த–பரிபாலந–பாரிஜாத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்

பிரஹ்லாதன், நாரதர், பராசரர், புண்டரீகர், வியாசர் போன்றவர்களின் இதயத்தில் குடியிருப்பவனே, பாரிஜாத மரம் போல் பக்தர்களைப் பரிவுடன் காப்பவனே, லக்ஷ்மி நரசிம்மனே, எனக்குக் கை கொடுத்து அருள்வீராக.

17. லக்ஷ்மீந்ருஸிம்ஹ-சரணாப்ஜ-மதுவ்ரதேந
ஸ்தோத்ரம் க்ருதம் ஸுபகரம் புவி ஶங்கரேண
யே தத்படந்தி மநுஜா ஹரிபக்தியுக்தா :
தே யாந்தி தத்பத-ஸரோஜமகண்டரூபம்

லக்ஷ்மி நரசிம்மரின் பாதத் தாமரையில் அமர்ந்த தேனீ போன்ற சங்கரரால், இந்த பூமிக்கு நன்மை தரும் இந்தத் துதி செய்யப்பட்டது. யார் மகாவிஷ்ணுவிடம் பக்தி உடையவர்களாக இந்தத் துதியைப் படிக்கிறார்களோ, அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து, இறைவனின் இன்பமயமான திருவடிகளை அடைவார்கள்.



ஸ்ரீ யோகநரசிம்மர் - புள்ளம்பூதங்குடி





# ஸ்ரீ ந்ருஸிம்ஹாஷ்டோத்தர ஸதநாமாவளி:

ஓம் நாரஸிம்ஹாய நம:
ஓம் மஹாஸிம்ஹாய நம:
ஓம் திவ்யஸிம்ஹாய நம:
ஓம் மஹாபலாய நம:
ஓம் உக்ரஸிம்ஹாய நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் உபேந்த்ராய நம:
ஓம் அக்நிலோசநாய நம:
ஓம் ரௌத்ராயநாய நம:
ஓம் ஸௌரயே நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் ஸுவிக்ரமபராக்ரமாய நம:
ஓம் ஹரிகோலாஹலாய நம:
ஓம் சக்ரிணே நம:
ஓம் விஜயாய நம:
ஓம் ஜயாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் தைத்யாந்தகாய நம:
ஓம் பரப்ரஹ்மணே நம:
ஓம் அகோராய நம:
ஓம் கோரவிக்ரமாய நம:
ஓம் ஜ்வாலாமுகாய நம:
ஓம் ஜ்வாலாமாலிநே நம:
ஓம் மஹாஜ்வாலாய நம:
ஓம் மஹாப்ரபவே நம:
ஓம் நிடிலாக்ஷாய நம:
ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:
ஓம் துர்நிரீக்ஷ்யாய நம:
ஓம் ப்ரதாபநாய நம:
ஓம் மஹாதம்ஷ்ட்ராயுதா நம:
ஓம் ப்ராஜ்ஞாய நம:
ஓம் ஹிரண்யகநிஷூதநாய நம:
ஓம் சண்டகோபிநே நம:
ஓம் ஸுராரிக்நாய நம:
ஓம் ஸதார்த்திக்நாய நம:
ஓம் ஸதாஶிவாய நம:
ஓம் குணபத்ராய நம:
ஓம் மஹாபத்ராய நம:
ஓம் பலபத்ராய நம:
ஓம் ஸுபத்ரகாய நம:
ஓம் கராளாய நம:
ஓம் விகராளாய நம:
ஓம் விகர்த்ரே நம:
ஓம் ஸர்வகர்த்ருகாய நம:
ஓம் பைரவாடம்பராய நம:
ஓம் திவ்யாய நம:
ஓம் அகம்யாய நம:
ஓம் ஸர்வஸத்ருஜிதே நம:
ஓம் அமோகாஸ்த்ராய நம:
ஓம் ஸஸ்த்ரதராய நம:
ஓம் ஹவ்யகவ்டாய நம:
ஓம் ஸுரேஸ்வராய நம:
ஓம் ஸஹஸ்ரபாஹவே நம:

29

## ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம ஸ்தோத்திரங்கள்

ஓம் வஜ்ரநகாய நம:
ஓம் ஸர்வஸித்தயே நம:
ஓம் ஜநார்தநாய நம:
ஓம் அநந்தாய நம:
ஓம் பகவதே நம:
ஓம் ஸ்தூலாய நம:
ஓம் அகம்யாய நம:
ஓம் பராவராய நம:
ஓம் ஸர்வமந்த்ரைகரூபாய நம:
ஓம் ஸர்வயந்த்ரவிதாரணாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் பரமாநந்தாய நம:
ஓம் காலஜிதே நம:
ஓம் ககவாஹநாய நம:
ஓம் பக்தாதிவத் ஸலாய நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் ஸூவ்யக்தாய நம:
ஓம் ஸூலபாய நம
ஓம் ஸூசயே நம
ஓம் லோகைகநாயகாய நம:
ஓம் ஸர்வாய நம:
ஓம் ஶரணாகத–வத்ஸலாய நம:
ஓம் தீராய நம:
ஓம் தராய நம:
ஓம் ஸர்வஜ்ஞாய நம:
ஓம் பீமாய நம:
ஓம் பீமபராக்ரமாய நம:
ஓம் தேவப்ரியாய நம:
ஓம் நுதாய நம:
ஓம் பூஜ்யாய நம:
ஓம் பவஹ்ருதே நம
ஓம் பரமேஸ்வராய நம
ஓம் ஸ்ரீவத்ஸவக்ஷஸே நம:
ஓம் ஸ்ரீவாஸாய நம:
ஓம் விபவே நம:
ஓம் ஸங்கர்ஷணாய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் த்ரி லோகாத்மநே நம:
ஓம் காலாய நம:
ஓம் ஸர்வேஸ்வரேஸ்வராய நம:
ஓம் விஸ்வம்பராய நம:
ஓம் ஸ்திரபார்யாய நம:
ஓம் அச்யுதாய நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் அதோக்ஷஜாய நம:
ஓம் அக்ஷயாய நம:
ஓம் ஸேவ்யாய நம:
ஓம் வநமாலிநே நம:
ஓம் ப்ரகம்பநாய நம:
ஓம் குரவே நம:
ஓம் லோககுரவே நம:
ஓம் ஸ்ரஷ்ட்ரே நம:
ஓம் பரஸ்மை ஜ்யோதிஷே நம:
ஓம் பராயணாய நம:

ஸ்ரீ பூமீநீளாஸமேத ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ

பரப்ரஹ்மனே நம: